# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 85/2019 | Date : 25.07.2023 | PW2 |
|---|---|---|
| Name: ராஜேந்திரன் | S/o. அம்மாசி கவுண்டர் | |
| Evidence Recorded Time: 12.01 P.M. to 12.05 P.M | | |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

வாதி எனக்கு என்ன உறவு முறை வேண்டும் என்றால் அண்ணன் ஆவார். என் அம்மா பெயர் என்ன என்றால் அலமேலு ஆகும். துரைசாமியின் அம்மா பெயர் என்ன என்றால் நினைவில்லை. நான் தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் வாதி துரைசாமி என் உடன் பிறந்த சகோதரர் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாதி துரைசாமியின் அம்மா பெயர் நினைவில்லை, என் தாயாரும், வாதியின் தாயாரும் ஒரே நபர் இல்லை என்றால் சரிதான். வாதி என் உடன் பிறந்த சகோதரர் என்று தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரிதான். வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் என் அண்ணன் இடம் அவருக்கு வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளார். என் அண்ணன்தான் தாவா சொத்தின் உரிமையாளர் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் அவ்வாறுதான் தாக்கல் செய்துள்ளார்.

(சாட்சி திடீரென மயங்கி விழுந்ததால் வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/-PW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.